Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 115/2025** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **திருஞானகுரு** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**01.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை வெள்ளையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 17.05.2024 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் திருச்சுழி பிரதான சாலையில் உள்ள எனக்கு சொந்தமான கடையில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது ஏதோ சத்தம் கேட்டது. நான் என்னவென்று வெளியே வந்து பார்த்தபோது இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டு இருந்தது. விபத்து நடந்தபோது நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள், அவர்களிடமும் நான் இதை தான் கூறினேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**:

1. கடந்த 17.05.2024 ம் தேதி மதியம் 02.15 மணிக்க நான் எனது கடையில் இருந்தபோது அருகில் டயர் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது அருப்புக்கோட்டை – திருச்சுழி ரோட்டில் நம்பர் இல்லாத TVS

XL 100 புதிய இருசக்கர வாகனத்தில் சென்ற முத்துராஜ் மீது ஆஜர் எதிரி அவரது ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் காயம்பட்டவர்களை தூக்கியதாகவும், முத்துராசுவை தகவல் தெரிந்து வந்த அவரது குடும்பத்தார்கள் வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி சிகிச்சை செய்து வெளிநோயாளியாக அனுப்பி வைத்ததாகவும், வீட்டில் ஓய்வில் இருந்த முத்துராஜ் 18.05.2024 ம் தேதி அதிகாலை சுமார் 01.00 மணிக்கு வயிறு வலிப்பதாக சொன்னதால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது முத்துராஜ் இறந்துவிட்டதாக தகவல் சொன்னதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது கடை வாசல் தெற்கு திசையை பார்த்து உள்ளது என்றால் சரிதான். எனது கடைக்கு எதிர் திசையில் தான் விபத்து நடந்த வாகனங்கள் சாலையில் கிடந்தன என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 115/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **ஜேக்கப்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**01.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது புலியூரானில் குடியிருந்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. கடந்த 18.05.2024 ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் அருப்புக்கோட்டை பெத்தம்மாள் கோவில் அருகே போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக நான் மேற்படி கையெழுத்தை செய்து கொடுத்தேன். என்னுடன் சேர்ந்து எனது அண்ணன் நீதிராஜும் அதில் சாட்சி கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் யாரிடம் ஓட்டுநராக பணி செய்கிறேன் என்றால் எனது அண்ணன் நீதிராஜிடம் பணி செய்து வருகிறேன். நான் எதற்காக 18.05.2024 ம் தேதி பெத்தம்மாள் கோவில் அருகே சென்றேன் என்றால் வாகனம் பழுது பார்ப்பதற்காக சென்றிருந்தோம், அப்போது கையெழுத்து வாங்கினார்கள். நான் ஏற்கனவே வேலைக்காக விட்டிருந்த வாகனத்தை

பார்ப்பதற்காக நானும், எனது அண்ணனும் இருசக்கர வாகனத்தில் அங்கு சென்றோம். இவ்வழக்கில் இறந்துபோன நபரும், அசா.1ம் எங்களது ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். ப.சா.2 சத்தியசீலன் எனது பெரியப்பா என்றால் சரிதான். மேற்படி சத்தியசீலன் ஊராட்சி மன்ற தலைவராக இருக்கிறார் என்றால் சரிதான். எனது பெரியப்பா சத்தியசீலன் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நாள் தேதி நேரத்தில் நான் பார்வை மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பெரியப்பா சத்தியசீலன் பிரதான அரசியல் கட்சியில் முக்கியமான பொறுப்பில் இருக்கிறார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை**